தெரியாது. அது உள்ளபடியே பல கிராமங்கள் அடங்கிய திட்டம். அத்தோடு அந்த இடத்திலே, தாமிரவருணி ஆறு தவிர்த்து மற்ற இடங்களில் உப்பு நீர் தான் இருக்கின்றது. ஆகவேதான் தாமிரவருணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. திட்டம் போட்டு விரைவில் நிறைவேற்றப் படும். அதற்கான பணிகள் தொடங்கப்படும். ஆனால் ஓராண் டிலே முடிந்துவிடுமா என்பதைப் பற்றி தற்போது சொல்வதற் கில்லை.

விருதுநகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.

12—(* வினா எண். 12868) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(ஆ) விருதுநகருக்கு பாதாள சாக்கடை அமைப்பதற் கான ஆய்வுப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விருதுநகருக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் எந்தவிதமான சர்வேயும் நடத்தப்படவில்லை. சென்ற ஆண்டு முதலே அந்த நகராட்சியில் வேலைகள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருவதாக இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் கள். ஆனால் எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை. நீண்டகாலமாக ஆய்வு நடந்தப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத் தலைநகராக இருக்கிறது. அங்கே சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது. ஆகவே இத்திட்டத்தினை சீக்கிரம் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆய்வு 3½ இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது. ஆய்வுப் பணிகள் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. விருதுநகருக்கு மொத்தமாக 71 கிலோமீட்டர் நீளத்தில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு அதற்கு ஒப்புதல் அளித்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விருதுநகருக்கு 48 ஆண்டுகளுக்கு முன்பே பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமாக திட்டத்தினை நிறைவேற்ற ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 48 ஆண்டுகளுக்கு முன்பு யார் சொன்னார்களோ, தெரியாது. அப்போது அமைச்சராக நான் இல்லை. ஆனால் இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதுபோல பல இடங்களில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. சில இடங்களில் சாக்கடை கொண்டு போய் விடும் இடங்களிலுள்ள நிலத்தின் சொந்தக்காரர்கள் அதனைக் கொண்டுபோய் விட வழிவிட மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி பல இடங்களிலும் பாதாள சாக்கடை அமைப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அதுபோல விருதுநகரிலும் விரைவிலே திட்டப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு நகராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், சில இடங்களில் சீக்கிரம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதாகவும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் திருச்சி நகராட்சியில் 1971-ல் போடப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம் 1987 வரை நிறைவேற்றப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[1987 நவம்பர் 10

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகுந்த பதில் தருகிறேன்.

விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியருக்கு தீவிர பயிற்சி அளிக்கும் திட்டம்

13—(* வினா எண் 2683) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்து எடுத்து அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக விளையாட்டு வாரியம் மாணவர்களை ஊக்குவிக்க என்னென்ன திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மிக இளமையிலே சிறார்களைத் தேர்ந்தெடுத்தல் என்னும் திட்டத்தை (catch them very young) 5 வயதுக்கு உட்பட்ட நர்சரி சிறார்களுக்காக நடைமுறைப்படுத்தி வருகிறோம். அதுபோல இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் 14 வயதுக்கு உட்பட்ட சிறார் சிறுமியர்களுக்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஊரக விளையாட்டுப் போட்டி (All India Rural Sports) என்கிற முறையில் 14 வயதுக்கு உட்பட்ட சிறார் சிறுமியர்களுக்காக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கோடைக் கால பயிற்சி முகாம் என்கிற பெயரில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் 32-க்கு நிதியுதவி அளித்து அதன் மூலமாக சிறுவர் சிறுமியருக்கு தேசிய விளையாட்டு ஊக்கத் தொகை அளிக்கிறோம். பள்ளிகளுக்கு அதன்மூலம் ஊக்குவிப்பு அளிக்கிறோம். இப்படி நல்ல பல திட்டங்களை சிறுவர் சிறுமியருக்காக நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.